بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/08/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**2024 ஜெர்மனி ஆண்டு மாநாட்டையொட்டி ஜல்ஸாவின் நோக்கங்கள், குறிக்கோள்கள் குறித்து கருத்தாழமிக்க எடுத்துரைப்பு மற்றும் சில துஆக்களை மீண்டும் மீண்டும் ஓதுமாறு சிறப்பான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

இன்று ஜெர்மனி ஆண்டுமாநாடு துவங்குகிறது. அல்ஹம்துலில்லாஹ். இப்பொழுது ஜெர்மனி ஜமாஅத் அங்கு ஜல்ஸாவில் என்னைப் பார்க்க விரும்பியிருந்தது. ஆனால், மனிதனுடன் மனிதத் தேவைகளும் இணைந்துள்ளன. உடல்நலம் போன்றவையும் அதன் ஒரு பகுதியாகும். இதனால் மருத்துவரின் ஆலோசனைப்படி, கடைசி நேரத்தில் ஜெர்மனி பயணத்தை ஒத்திவைக்க வேண்டி வந்தது. இங்கிருந்தே ஜெர்மனியின் ஜல்ஸா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, இங்கிருந்தே ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களுடன் உரையாடுவதாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுவும் அல்லாஹ் வழங்கும் நல்வாய்ப்பு மூலமாகவே நடைபெறும். அல்லாஹ் நல்வாய்ப்பு வழங்கிட துஆ செய்யுங்கள். இந்தக் காலத்தின் கண்டுபிடிப்புகளில் அல்லாஹ் தொடர்புக்கான வழிகளை வழங்கியிருப்பதும் அவனது பேரருளாகும். பல மக்கள் என்னை நேரில் சந்திக்க விரும்பியிருந்தார்கள். அதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் வேறு எப்பொழுதாவது செய்து விடுவான்.

ட்யூட்டி பார்க்கும் எல்லா ஊழியர்களிடமும் நான் கூறவிரும்புவது, விருந்தினர்களின் விருந்தோம்பலுக்காக இயன்ற அளவுக்குத் தொண்டாற்றும் உணர்வுடன் பணிபுரியுங்கள். நன்னடத்தையைக் காட்டுங்கள். ஒவ்வொரு துறையின் பணியாளரும் புன்சிரித்த முகத்துடன் விருந்தினர்களை அணுக வேண்டும். துஆக்கள் செய்தவாறு பணியாற்றுங்கள். ‘நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அழைத்ததன் பேரில் வந்திருக்கும் விருந்தினர்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். நிலைமைகள் எப்படி வேண்டுமானாலும் ஆகட்டும், நாம் நம்முடைய நல்லொழுக்கத்தின் தரத்தை உயர்வாக வைக்க வேண்டும். தொண்டு செய்து கொண்டே செல்ல வேண்டும்’ என்ற உணர்வுடன் பணிபுரியுங்கள். விருந்தினர்களும் ஜல்ஸாவின் நோக்கத்தை நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வோர் இன்னலையும் பொறுத்துக் கொண்டவாறு இந்த மூன்று நாள்களில் ஜல்ஸாவின் நோக்கத்தை முன் நிறுத்துங்கள். ஆண்டில் ஒருமுறை நாம் அனைவரும் ஒன்றுகூடி நமது ஆன்மிக மற்றும் நல்லொழுக்க முன்னேற்றத்திற்கான ஏற்பாட்டை செய்திடுவது அல்லாஹ் நம்மீது புரிந்துள்ள

அருட்கொடைகளுள் மிகப் பெரும் அருட்கொடையாகும்; இதை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அவன் நமக்கு வழங்கியுள்ளான் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். நம்மை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்லக்கூடிய, இறையச்சத்தில் அதிகரிக்கச் செய்யக்கூடிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுங்கள்.

''நாம் உயர்ந்த ஒழுக்கம் மற்றும் ஒருவர் மற்றவருக்கான உரிமைகள் ஆகியவற்றை செலுத்துவற்கும் உயர்தரத்தை நிலைநாட்ட வேண்டும்; ஒருவர் மற்றவருடன் அன்பு, நேசம் மற்றும் தொடர்பை அதிகரிக்க வேண்டும்; மனக்கசப்புகளை அதற்றிட வேண்டும்; அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்; எல்லா விதமான வீணானவற்றிலிருந்தும் தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்'' என்ற எண்ணத்துடன், நிய்யத்துடன் நாள்களைக் கழிப்போமேயானால், இதைத்தான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்துள்ளார்கள். இதுதான் அல்லாஹ்வுக்குப் பிடித்ததாகும். இதனால்தான் அவன் நம்மை மனிதர்களாக, படைப்பினங்களில் மிகவும் கண்ணியத்திற்குரியவர்களாகப் படைத்துள்ளான். ஜல்ஸாவில் வரக்கூடிய ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் மீதான அன்பில் அதிகரிக்க, உயர்ந்த ஒழுக்கத்தை வெளிப்படுத்த, அடியார்களுக்கான உரிமைகளை செலுத்த மற்றும் இறையச்சத்தைப் பெற முயற்சி செய்யப்படவில்லை என்றால், ஜல்ஸாவில் வருவதற்கான நோக்கம் நிறைவேறுவதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகிறார்கள்: ''தற்போதுள்ள பீர்மார்களைப் போன்று, வெறுமனே வெளிப்படையான மேன்மையைக் காட்டுவதற்காக, என்னிடம் பைஅத் செய்தவர்களை ஒன்று திரட்ட வேண்டும் என நான் ஒருபோதும் விரும்பவில்லை. மாறாக, எதற்காக நான் இதை ஒரு காரணமாக ஆக்குகிறேனோ அந்த அசல் நோக்கம், அல்லாஹ்வின் படைப்பினங்களின் சீர்திருத்தமாகும்.'' எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் இந்த விஷயத்தை மனதில் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்தைப் பெற முயற்சி செய்வீர்களாயின், அப்பொழுதுதான் ஜல்ஸாவில் வந்த நோக்கம் நிறைவேறும். ஜல்ஸாவில் வந்தும் அல்லாஹ்வுடன் தொடர்பு உருவாகவில்லை என்றால், ஒழுக்க நிலை மேம்படவில்லை என்றால், இத்தகைய கலந்து கொள்ளக்கூடியவர்கள் மீது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் முற்றிலும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ''இந்த எளியவனின் பைஅத் அமைப்பில் நுழைந்துள்ள எல்லா கலப்பற்ற மக்களுக்கும் வெளிப்படுத்துவதாவது, பைஅத் செய்வதன் நோக்கம் என்னவென்றால், உலகின் மீதான அன்பு தணிந்து விட வேண்டும். தம் கண்ணியத்திற்குரிய எஜமானர் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதர் (ஸல்) அவர்களின் மீதான அன்பு உள்ளத்தில் மேலோங்கி விட வேண்டும். எதன் மூலம் மறுமை பயணம் அருவருப்பானதாகத் தெரியாதோ, அத்தகைய உலகைத் துண்டிக்கும் நிலை உருவாகிட வேண்டும் என்பதாகும்.'' எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்! உலக அருட்கொடைகள் ஓர் அஹ்மதியை இறையச்சத்தை விட்டும்

விலக்கக்கூடியவையாக இருக்கக் கூடாது. இந்த வாணிபங்கள் அல்லது உலக அருட்கொடைகள் ஓர் அஹ்மதியை இறைவனுக்கு நன்றி செலுத்துபவராக ஆக்க வேண்டும். இறைவன் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மீதான அன்பு அதிகதிகமாக உள்ளத்தில் உருவாகிட வேண்டும். எனவே, உங்களது இறையச்சத்தின் தரத்தை அதிகரித்திட முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ‘‘இறைவன் இந்த ஜமாஅத்தை உருவாக்க விரும்பினான் எனும் பொழுது, அதன் மூலம் உலகிலிருந்து மறைந்து போய்விட்டிருந்த உண்மையான இறைஞானம், அந்தக் காலத்தில் காணப்பட்டிராத உண்மையான இறையச்சம் மற்றும் தூய்மையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்பதே நோக்கமாகும்.’’ அன்னார் கூறுகிறார்கள்: ‘‘தம்மை எனது ஜமாஅத்தில் இணைத்துக் கொள்ளும் அந்த அனைத்து மக்களே! நீங்கள் இறையச்சத்தின் வழியில் அடியெடுத்து வைக்கும் பொழுதுதான் விண்ணில் எனது ஜமாஅத்தைச் சேர்ந்தவர்களாக கணக்கிடப்படுவீர்கள்.’’ பிறகு கூறுகிறார்கள்: ‘‘இறைவனின் மகத்துவத்தை உங்களுடைய உள்ளங்களில் பதிய வையுங்கள். இறைவனும் செயல்ரீதியாக தனது பரிவையும் பேரருளையும் உங்கள் மீது வெளிப்படுத்தும் பொருட்டு, அவனது ஓரிறைமையின் ஒப்புதலை நாவினால் மட்டுமின்றி, செயல் ரீதியாகவும் வழங்கிடுங்கள்.’’ எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் இந்த வழிகாட்டல்களை எப்பொழுதும் மனதில் கொள்ளுங்கள். இதுவே ஜல்ஸாவில் வருவதன் நோக்கமாகும். எனது ஒவ்வோர் அமலும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக இருக்க வேண்டும் என்ற முயற்சி எப்பொழுதும் இருக்க வேண்டும். எப்பொழுதும் இது நினைவிருக்கட்டும்! இந்த விஷயம் கருத்தில் கொள்ளப்படட்டும்! எனது ஒவ்வோர் அசைவும் இறைவனின் பார்வைக்கு முன் உள்ளது என்பது எப்பொழுதும் சிந்தனையில் பதிந்திருக்கட்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் ஜல்ஸா சாலானா மற்றும் திக்ரே இலாஹி தொடர்பாக கூறுகிறார்கள்: இந்த மாநாடு இறையடையாளங்களில் ஒன்றாகும். இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கான ஒரு நோக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆன்மிகத்தில் முன்னேற்றத்தைப் பெறுதல் என்று கூறியுள்ளார்கள். அதற்கான ஒரு மிகப்பெரிய வழி இபாதத் மற்றும் திக்ரே இலாஹி ஆகும். திக்ரே இலாஹி பற்றி அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் திக்ரே இலாஹி செய்தால் (இறைவனை நினைவு கூர்ந்தால்), அல்லாஹ்வும் உங்களை நினைவு கூர்வான். எனவே, எவரை அவருடைய எஜமானன், உரிமையாளன், அவரைப் படைத்தவன் நினைவு கூர்கிறானோ அந்த நபர் நற்பேறு பெற்றவர் ஆவார். எனவே, இந்த முக்கியமான விஷயத்தின் பக்கம் இந்த நாள்களில் ஒவ்வொருவரும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பாகவே நான் ஒரு திட்டத்தையும் அறிவிக்க விரும்புகிறேன்.

இது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஒரு கனவாகும். அவர்களுக்கு ஒரு சான்றோர் (கனவில்) இவ்வாறு கூறினார்: ஜமாஅத்தின் ஒவ்வொரு நபரும், பெரியவர்கள் ஒவ்வொருவரும் **200** முறை

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ

எனும் இந்த துரூத் ஷரீஃபை ஓத வேண்டும். இடைப்பட்ட வயதில் உள்ளவர்கள், (அதாவது, 15 இலிருந்து 25 வயது வரை உள்ளவர்கள்) 100 முறையும், பிள்ளைகள் 33, 33 முறையும் ஓத வேண்டும். சின்னக் குழந்தைகளுக்கு அவர்களுடைய தாய் தந்தையர் மூன்று, நான்கு முறை இதை ஓத வைத்திட வேண்டும். இவ்வாறே 100 முறை இஸ்திஃக்ஃபார் செய்திடுங்கள். நான் இதில் இந்த துஆவையும் இணைக்கிறேன். 100 முறை رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ என்ற துஆவையும் மீண்டும் மீண்டும் ஓதுங்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்குக் கனவில் இதுதான் காட்டப்பட்டது: இதை செய்வீர்களாயின், ஒரு பாதுகாப்பான கோட்டையில் நுழைந்து விடுவீர்கள். அங்கு ஷைத்தானால் ஒருபோதும் நுழைய முடியாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜல்ஸாவின் நோக்கங்களில் ஒரு நோக்கமாக இந்த விஷயத்தை எடுத்துரைத்துள்ளார்கள்: ஒன்றுகூடக்கூடியவர்கள் ஒருவர் மற்றவருடன் அறிமுகத்தை அதிகரித்திடுங்கள். அதாவது, ஒருவர் மற்றவருடன் அன்பையும், அறிமுகத்தையும் அதிகரித்திடுங்கள். எனவே, இந்த நாள்களில் ஒருவர் மற்றவருடன் தொடர்புகளை அதிகரிப்பதில், அமைதியைப் பரப்புவதில் அதிகம் கவனம் செலுத்துங்கள். ஏற்கனவே உள்ள தொடர்புகளில் ஏதேனும் மனக்கசப்பு உருவாகி விட்டது என்றால், அதை அகற்றுவதற்கு முழு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெற்றிட, வீணான விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். சண்டை சச்சரவுகளிலிருந்து தப்புவது மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, உங்களுடைய பழைய சண்டை சச்சரவுகளுக்காகவும் ஒருவர் மற்றவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுங்கள். தனிப்பட்ட அகந்தை எனும் வலையிலிருந்து வெளியே வந்து விடுங்கள்.

அற்ப விஷயங்களுக்காக ஒருவர் மற்றவருடன் சண்டையிடுகிறார்கள் என்று எனக்கு முறையீடுகள் வருகின்றன. பிறகு (ஜமாஅத்) அமைப்பை நிலைபெற வைப்பதற்காக அவர்களுக்கு தண்டனையும் வழங்க வேண்டி வருகிறது. அதனால் வேதனை ஏற்படுகிறது. அதுவன்றி, மகிழ்ச்சியுடன் தண்டனை வழங்கப்படுகிறது என்பதல்ல. எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள்! ஜமாஅத்தின் புனிதத்தன்மையை நாம் நிலைநாட்ட வேண்டும். எனவே, நிர்வாகம் அல்லது காலத்தின் கலீஃபா யாருக்காவது தண்டனை வழங்குகிறார் என்றால், ஜமாஅத்தின் புனிதத்தன்மையை நிலைபெறச் செய்வதற்காக வழங்குகிறார். ஏனெனில், ஜமாஅத்தின் புனிதத்தன்மை எல்லா உறவுகளைக் காட்டிலும் அதிகமானதும், மேலானதுமாகும். இது தொடர்பாக பொறுப்பாளர்களுக்கும் அதிகமாக பொறுப்பு இருக்கிறது. எனவே, அவர்களிடம் சகிப்புத்தன்மையும் அதிகமாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நீங்கள் உள்ளத்தால் மிஸ்கீன் ஆகி விடுங்கள். பொதுவாக மனித குலத்துடன் அனுதாபமாக நடந்து கொள்ளுங்கள். நீங்களோ அவர்களுக்கு சொர்க்கத்தைப் பெற்றுத் தருவதாக அறிவுரை கூறுகிறீர்கள். இறைவனுக்கான கடமைகளை உள்ளத்தின் வேதனையுடன் நிறைவேற்றிடுங்கள். உங்களிடம் அவை குறித்து கேட்கப்படும். இறைவன் உங்களைத் தன்புறம் ஈர்த்து, உங்களுடைய உள்ளங்களைத் தூய்மைப்படுத்தும் பொருட்டு தொழுகைகளில் மிக அதிகமாக

துஆ செய்திடுங்கள். அன்னார் கூறுகிறார்கள்: மனிதன் இறைவனிடமிருந்து ஆற்றலைப் பெற்றிடாத வரை, எந்தத் தீமையையும் அகற்றும் வல்லமை அவனுக்கு இருக்காது.

ஆக, இவை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்த படித்தரங்கள் ஆகும். இவற்றை நாம் நம்மிடம் உருவாக்குவதற்கு முயற்சி செய்ய வேண்டும். உங்களுடைய ஒழுக்கங்கள் நல்லவையாக இருந்தால், இங்கு விருந்தினர்களும் நல்ல தாக்கங்களை எடுத்துச் செல்வார்கள். இந்த நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துதல் ஒரு மௌனமான தப்லீக் ஆக செயலாற்றும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த வேதனையுடன், துடிப்புடன் தமது ஜமாஅத்திற்கு துஆ செய்துள்ளார்கள்! அதற்கான ஒரு முன்மாதிரியை நான் உங்களுக்கு முன் எடுத்து வைக்கிறேன். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: துஆ செய்கிறேன். என்னிடம் வாழ்வின் மூச்சு இருக்கும் வரை செய்து கொண்டே இருப்பேன். அந்த துஆ இதுவேயாகும்: இறைவன் எனது இந்த ஜமாஅத்தின் உள்ளங்களைத் தூய்மைப்படுத்த வேண்டும். தனது கருணையின் கையை நீட்டி அவர்களுடைய உள்ளங்களைத் தன் பக்கம் திருப்ப வேண்டும். அவர்களுடைய உள்ளங்களிலிருந்து எல்லாத் தீமைகளையும் காழ்ப்புணர்ச்சியையும் அகற்றிட வேண்டும். ஒருவர் மற்றவர் மீது உண்மையான அன்பை வழங்கிட வேண்டும்.

இந்த ஜல்ஸா எல்லா அருள்களையும் தன்னிடத்தில் கொண்டதாக ஆகட்டுமாக! உலகின் நிலைமைகளுக்காகவும் துஆ செய்யுங்கள். உங்களது நாட்டுக்காகவும் அதிகம் துஆ செய்யுங்கள். நாம் கலப்பற்றவர்களாகி அல்லாஹ்வின் கட்டளைகள், இஸ்லாத்தின் போதனைகள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகள் ஆகியவற்றின்படி அமல் செய்யக்கூடியவர்களாக இருக்கும் போது, அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் நம்முடைய துஆக்களை செவியேற்பான். நாம் உலகிற்கு வழிகாட்டுவதற்கான வழிவகையாக ஆகக்கூடியவர்களாவோம்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ

فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ

بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ

لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**